கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
e-mail: npplans@yahoo.com, npmoeplan@gmail.com
Website: www.edumin.np.gov.lk

வலயக் கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு
02 OCT 2023
Received
Zonal Education Office
Vavuniya North

எனது இல / මගේ අංකය / My No. : NP/03/01/02/06
உமது இல / ඔබේ අංකය / Your No. :
திகதி / දිනය / Date : 2023.09.25

சுற்று நிருப இல: 2023/03

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மற்றும்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.

## அதிபர் வெற்றிடம் நிரப்புதல்

**1.0 நியமன நிபந்தனைகள்**

1.1 மாகாணப் பாடசாலை ஒன்றில் அதிபர் பதவிக்கான வெற்றிடம் ஏற்படும்போது அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கீழே குறிப்பிடப்பட்ட நியமன நிபந்தனைகளுக்கு அமைய நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடத்தி, அதனடிப்படையில் பொருத்தமான அதிபர் ஒருவர் நேர்முகத் தேர்வுக் குழுவால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

1.2 வலயக்கல்விப் பணிப்பாளர்கள், தங்கள் வலயத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில், ஓய்வு பெறல் காரணமாக அதிபர் வெற்றிடம் ஏற்படவுள்ள திகதிக்கு இயன்றளவு மூன்று (03) மாதங்களுக்கு முன்பதாக விண்ணப்பங்கள் கோரப்படுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

1.3 பதவியுயர்வு, இடமாற்றம், சேவை மாற்றம் போன்ற சந்தர்ப்பங்கள் காரணமாக ஏற்படும் வெற்றிடங்களை இயன்றளவு மூன்று மாத காலத்திற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

1.4 இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க முடியாத / இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த ஒருவரிடம் பொறுப்புக்களை வழங்கமுடியாத சந்தர்ப்பங்களில், பாடசாலை நிர்வாகத்தைச் சீராகக் கொண்டு செல்லும் வகையில் தகுதியான சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரிடம் பாடசாலையின் பொறுப்புக்களை கையளிக்க வலயக்கல்விப் பணிப்பாளர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப அதிபர் தரம் பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| வகை I (1AB , 1C ) பாடசாலை | இ.அ.சே. தரம் 1 |
| வகை II பாடசாலை | இ.அ.சே. தரம் 2 |
| வகை III பாடசாலை | இ.அ.சே. தரம் 3 |

1.6 நியமனம் பெறும் அதிபர்கள் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஒரு (01) வருடகாலம் அப்பாடசாலையில் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடையவராக இருத்தல் வேண்டும்.

செயலாளர் / ලේකම් / Secretary : 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office : 021-223 1343 (Gen.), 021-222 9673 (Senior Asst. Sec.), 021-222 2283 (Chief. Acct.), 021-222 2237 (Dir. Plan.), 021-222 0037 (DDE), 021-222 2219 (DSW), 021-222 0039 (A.O.)
தொலைநகலி / ෆැක්ස් / Fax : 021 - 222 0794 (Gen), 021 - 222 2239 (Plan), 021 - 222 2293 (Acct)

1.7 தேசிய பாடசாலையில் கடமை புரியும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோர் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதாயின், நிரல் கல்வி அமைச்சுச் செயலாளரின் விடுவிப்பிற்கான சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

1.8 ஏனைய மாகாணங்களின் பாடசாலைகளில் கடமை புரியும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோர் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதாயின் உரிய மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரின் விடுவிப்பிற்கான சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

1.9 விண்ணப்பதாரியின் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடனடி முன்னரான ஐந்து வருட சேவைக்காலம் செயலூக்கமுடையதான சேவைக் காலமாக அமைந்திருத்தல் வேண்டும்.

1.10 தற்போது கடமையாற்றும் பாடசாலையில் அதிபராக 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மாத்திரமே விண்ணப்பிக்கத் தகுதி பெறமுடியுமெனினும், அதிபர் சேவைத் தரநிலையில் ஏற்படும் பதவியுயர்வின்போது இந்நிபந்தனை பொருந்தாது. (பாடசாலைகளில் பிரதி, உதவி அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கும் இந்நிபந்தனை பொருந்தாது.)

1.11 வதிவிட மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டங்களுக்கு வெற்றிடம் காரணமாகவும், சேவையின் தேவை கருதியும் நியமிக்கப்பட்ட அதிபர் சேவையைச் சேர்ந்தோரும் குறித்த பாடசாலையில் குறைந்தது 03 வருட சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் விண்ணப்பங்கள் கோரப்படும்போது விண்ணப்பிக்க முடியும்.

## 2.0 நடைமுறைகள்

2.1 புதிதாக நியமனம் பெறும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு சேவை நிலையம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும்.

2.2 வேறு மாகாணங்களிலிருந்து / தேசிய பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அதிபர்களுக்கு அவர்களின் அதிபர் தரத்திற்கேற்ப வடமாகாணத்தில் வெற்றிடமுள்ள பொருத்தமான பாடசாலைகள் தொடர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுக்கமைய மாகாணக் கல்விச் செயலாளரினால் சேவை நிலையம் வழங்கப்படும்.

2.3 a.வகை II, வகை III பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் அப்பாடசாலைகளுக்குரிய வலயக்கல்விப் பணிப்பாளரினால் கோரப்படல் வேண்டும்.

b.வகை II, வகை III பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்திய பின்னர் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகத் தேர்வுச்சபை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, தெரிவுப் பட்டியல் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்நேர்முகத்தேர்வுச் சபையின் தலைவராக வலயக் கல்விப் பணிப்பாளர் / வலயக்கல்வி அலுவலகத்தில் தாபனம் மற்றும் பொது முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளரும் உறுப்பினர்களாக வலயக்கல்வி அலுவலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் இருவர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர், வடமாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர் ஆகியோரும் இடம்பெறல் வேண்டும்.

2.4 a. IAB, IC வகைப் பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் கோரப்படும்.

b. IAB, IC வகை பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்திய பின்னர் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, தெரிவுப் பட்டியல் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்நேர்முகத்தேர்வுச் சபையானது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரை (கல்வி நிர்வாகம்) தலைவராகவும் மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் அல்லது வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும்.

2.5 பிற மாகாணங்கள் / தேசிய பாடசாலைகளிலிருந்து விண்ணப்பிப்போர் வடமாகாணப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்படின் அதற்கான முறையான விடுவிப்பை வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாகப் பெற்று மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரால் தீர்மானிக்கப்படும் காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.6 a. இலங்கை அதிபர் சேவை தரத்தினையுடைய ஒருவர் கற்கைநெறி ஒன்றிற்கான முழுநேரக்கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்வாராயின் அவரது பதவி வெற்றிடமாகக் கருதப்பட்டு, புதிய அதிபரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

b. கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தோருக்கான சேவை நிலையமானது வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் சிபார்சுக்கமைய மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்படும்.

2.7 குறித்த பாடசாலையின் தரத்திற்குரிய இலங்கை அதிபர் சேவைத் தரத்தினைக் கொண்டிராத அதிபர்களுக்கு சேவை நிலையம் வழங்க வேண்டியிருப்பின் அடுத்த தரத்தில் உள்ளவருக்கு பதில் அதிபராகவும் அதற்கடுத்த தரத்தினை உடையவருக்கு கடமைகளைக் கவனிக்கும் அதிபராகவும் நியமனங்கள் வழங்கப்படும்.

2.8 உரிய தரத்திற்குரிய அதிபர் நியமிக்கப்படும் பட்சத்தில் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் பதில் அதிபர் அல்லது கடமைகளைக் கவனிக்கும் அதிபர் நியமனம் எந்நேரமும் முடிவுறுத்தப்படலாம்.

2.9 அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரப்படும் போது குறித்த பாடசாலையின் அதிபர் தரத்திற்கான உரிய தரத்தினைச் சேர்ந்தவர்களும் அதற்கு அடுத்தடுத்த நிலையிலுள்ள தரத்தை சேர்ந்தவர்களும் விண்ணப்பித்து இருப்பின், விண்ணப்பம் கோரப்பட்ட பாடசாலையின் தரத்திற்கேற்ப விண்ணப்பதாரிகளின் தரநிலை ஒழுங்கில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் அவ்வொழுங்கிலேயே நேர்முகத்தேர்வும் நடத்தப்படும்.

2.10 குறித்த பாடசாலைக்கு நியமிக்கப்படும் அதிபரின் செயலாற்றுகை திருப்தியளிக்காவிடின் அவரை பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்வதற்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

---

**2.11** அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரப்படும்போது எவரும் விண்ணப்பிக்காத சந்தர்ப்பங்களில் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டு அதிபர் ஒருவரை மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரால் நியமிக்க முடியும்.

**2.12** தமது தரத்திற்குரிய பொருத்தமான பாடசாலை வகையிலும் பார்க்கக் குறைந்த வகையைச் சேர்ந்த பாடசாலைகளில் கீழுழைப்பு நிலையில் கடமைபுரியும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள், தங்கள் தரத்திற்குரிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அவர்களது தகவல்களை வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாகப் பெற்று, அதிபர் தரத்திற்கேற்ப பொருத்தமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கும் அதிகாரம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

**2.13** நேர்முகப்பரீட்சையின் போது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டதற்கமைய புள்ளிகள் வழங்கப்பட்டு, அதனடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**2.14** இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படாத விடயங்கள் அல்லது பொருள்கோடல் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**2.15** எம்மால் வெளியிடப்பட்ட **2022.01.20** ஆம் திகதிய **2022/01** ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய ஏற்கனவே அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு மட்டும் இச்சுற்றுநிருபம் பொருந்தாது என்பதுடன் அவற்றிற்கான அதிபர் தெரிவுகள் **2022/01** ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**2.16** இச்சுற்றுநிருபம் **2023.10.01** ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் எமது **2022/01**ம் இலக்க **2022.01.20** ஆம் திகதிய சுற்று நிருபம் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

**ம.பற்றிக் டிறஞ்சன்**
செயலாளர்.

**ம.பற்றிக் டிறஞ்சன்**
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

# 2023/03 புள்ளி வழங்கல் திட்டம்

01. சேவை மூப்பு (ஆகக்கூடியது 42 புள்ளிகள் )

| | |
|---|---|
| இ.அ.சே I | இ.அ.சே I இல் சேவைக் காலம் - வருடமொன்றிற்கு 4 புள்ளிகள் |
| இ.அ.சே II | இ.அ.சே II இல் சேவைக் காலம் - வருடமொன்றுக்கு 5 புள்ளிகள் |
| இ.அ.சே III | இ.அ.சே III இல் சேவைக் காலம் - வருடமொன்றுக்கு 6 புள்ளிகள் |

விண்ணப்பதாரியின் தற்போதைய அதிபர் சேவைத் தரத்துக்குரிய சேவைக்காலத்துக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். இச்சுற்றுநிருபத்தின் நியமன நடைமுறைகள் 23 இற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும்.

02. அதிபர் சேவைத் தரத்தில் கஷ்ட, மிகக்கஷ்ட மற்றும் வெளிமாவட்ட சேவை (ஆகக்கூடியது 10 புள்ளிகள் )

I. மிகக்கஷ்ட / கஷ்டப் பிரதேச பாடசாலை (இறுதி 05 வருடங்கள்)

a. மிகக்கஷ்ட பிரதேச பாடசாலை சேவைக்காலம் — வருடமொன்றுக்கு 01 புள்ளி

b. கஷ்டப் பிரதேச பாடசாலை சேவைக்காலம் — வருடமொன்றுக்கு ½ புள்ளி

(ஆகக்கூடியது 05 புள்ளிகள்)

II. வெளிமாவட்டம் (இறுதி 05 வருடங்கள்)

a. வதிவிட மாவட்டத்திற்கு வெளியேயானது — வருடமொன்றுக்கு 01 புள்ளி

(ஆகக்கூடியது 05 புள்ளிகள்)

03. மொழித்தேர்ச்சி (ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

a. ஆங்கிலம் (ஆகக்கூடியது ஓர் உயர் தகைமை மட்டும் கருத்தில் கொள்ளப்படும்)

I. க.பொ.த.(சாதாரணம்)

| பழைய பாடத்திட்டம் (2001முன்னர்) | | புதிய பாடத்திட்டம் (2001 இலிருந்து) | |
|---|---|---|---|
| D- | 02புள்ளி | A- | 02புள்ளி |
| C- | 01புள்ளி | B/ C- | 01புள்ளி |

II க.பொ.த (உயர்தரம்) – பிரதான பாடம்

| | | | |
|---|---|---|---|
| A - | 03 புள்ளி | B - | 02 புள்ளி |
| C - | 02 புள்ளி | S - | 01 புள்ளி |

(ஆகக்கூடியது 05புள்ளிகள்)

III வேறு தகைமை

a. பல்கலையில் ஆங்கிலம் ஒரு பாடம் (பிரதானம்) — 05 புள்ளி

b. ஆங்கில மொழி மூலம் பட்டம் — 04 புள்ளி

c. ஆங்கில டிப்ளோமா (2 வருட கற்கை) — 04 புள்ளி

b. இரண்டாம் மொழித் தேர்ச்சி (ஆகக்கூடியது ஓர் உயர் தகைமை மட்டும் கருத்தில் கொள்ளப்படும்)

I. க.பொ.த(சா/தரம்) இரண்டாம் மொழிக்குரிய பரீட்சையில் தோற்றியிருத்தல்

| பழைய பாடத்திட்டம் (2001முன்னர்) | | புதிய பாடத்திட்டம் (2001 இலிருந்து) | |
|---|---|---|---|
| D - | 03புள்ளி | A - | 03புள்ளி |
| C - | 02புள்ளி | B/ C - | 02புள்ளி |

செயலாளர் / Secretary — [illegible]
அலுவலகம் / Office — 021-222 1343 (Gen.), 021-222 9873 (Senior Asst. Sec.), 021-222 2283 (Chief. Acct.), 021-222 2237 (Dir. Plan.), 021-222 0027 (DDE), 021-222 2218 (DSW), 021-222 0029 (A.O.)
தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021 - 222 0794 (Gen.), 021 - 222 2239 (Plan.), 021 - 222 2283 (Acct)

II. க.பொ.த(சா/தரம்) முதலாம் மொழிக்குரிய பரீட்சையில் தோற்றியிருத்தல்
S – 04புள்ளி
C இற்கு மேல் 05 புள்ளி

III. வேறு தகைமை
06 மாதத்திறகு குறையாத டிப்ளோமா 01 புள்ளி
01 வருடத்திற்கு குறையாத டிப்ளோமா 03 புள்ளி (05 புள்ளிகள்)

**04.** கல்வித் தகைமை மற்றும் தொழிற்றகைமை (ஆகக்கூடியது ஒரு தகைமைக்கு மட்டும்) (ஆகக்கூடியது 15 புள்ளிகள்)

- **a.** கலாநிதி 15புள்ளி
- **b.** முதுதத்துவமாணி 12புள்ளி
- **c.** முதுமாணி 10புள்ளி
- **d.** பட்டத்துடன் பட்டப்பின் கல்வி/ கல்வி முகாமைத்துவ டிப்ளோமா 08புள்ளி
- **e.** வகுப்புச் சித்தியுடனான பட்டம் 06புள்ளி
- **f.** பொதுப் பட்டம் 04புள்ளி
- **g.** பயிற்றப்பட்ட ஆசிரியர் / கல்வியியற் கல்லூரி டிப்ளோமா 02புள்ளி

**05.** முன்னளிக்கை (வழங்கப்படும் தலைப்பில் **5-6** நிமிடங்களுக்குள் நவீன ஊடகப் பயன்பாட்டுடன் அளிக்கை செய்தல் வேண்டும்)– (ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

- a. அறிமுகம் 01புள்ளி
- b. முன்வைத்தல் திட்டம் 02புள்ளி
- c. முன்வைத்தல் திறன் (தொடர்பு சாதன பிரயோகத்திறன் உட்பட) 03புள்ளி
- d. விடய அறிவு 03புள்ளி
- e. நேரமுகாமைத்துவம் 01புள்ளி

**06.** செயலாற்றுகைகள் (ஆகக்கூடியது 7 புள்ளிகள்)

1. அமைச்சு மற்றும் திணைக்களத் தலைவர்களால் வழங்கப்பட்ட மெச்சுரைகள்- (பொது 230 a படிவத்தில்) 03 புள்ளி
2. கல்வி சார் ஆய்வுகள் - மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்ட ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டவை மட்டும் (கற்கைநெறி ஒன்றிற்காக மேற்கொள்ளப்பட்டவை மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர் வெளியீடுகளில் வந்தவை கருத்திற்கொள்ளப்படமாட்டாது.) 03புள்ளி
3. சர்வதேச ரீதியில் சமூகப்பணியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களில் தொண்டு அடிப்படையில் கடமையாற்றுபவர்கள் 01புள்ளி

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk
e-mail: npplano@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல / මගේ අංකය / My No. NP/03/01/02/06
உமது இல / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date 2023.10.16

வலயக் கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு
18 OCT 2023
Received
Zonal Education Office
Vavuniya North

சுற்று நிருப இல: **2023/03A**

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மற்றும்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.

## அதிபர் வெற்றிடம் நிரப்புதல் - திருத்தம்

என்னால் **2023.09.25** ஆம் திகதி வெளியிடப்பட்ட 2023/03 இலக்க சுற்றறிக்கையின் நியமன நிபந்தனைகளில் **1.6** ஆனது பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

நியமனம் பெறும் அதிபர்கள் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஆகக்குறைந்தது மூன்று (03) வருடகாலம் அப்பாடசாலையில் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடையவராக இருத்தல் வேண்டும்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-223 1343 (Gen.) 021-222 9673 (Senior Asst. Sec.) 021-222 2283 (Chief. Acct.) 021-222 2237 (Dir. Plan.) 021-222 0037 (DDE) 021-222 2219 (DSW) 021-222 0039 (A.O.)
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 - 222 0794 (Gen) 021 - 222 2239 (Plan) 021 - 222 2293 (Acct)